

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் மகள் சாந்தி அவர்கள் மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் நேற்று அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார். அதுபோது, திருமதி. துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் புதல்வி

# சாந்தி மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, செப். 22 -

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (20-09-2026)\ நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் மகள் திருமதி சாந்தி அவர்கள் மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்.

அதுபோது, திருமதி. துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:

“தலைவர் கலைஞர் அவர்களும் - நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் நட்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்கள். காலத்தால் கரையாத அவர்களது நட்பின் பாசம், இரு குடும்பங்களையும் தலைமுறைகள் கடந்த உறவாகப் பிணைத்திருக்கிறது. அந்தப் பாசப் பிணைப்பில் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே அன்பு பாராட்டி வந்த சகோதரி திருமிகு சாந்தி அவர்களின் மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது.

அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்புச் சகோதரியை இழந்து ஆற்றொணாத் துயரில் வாடும் அவரது கணவர் நாராயணசாமி, மகள்கள் விஜிலட்சுமி, சத்யவதி, சகோதரர்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### ‘டம்மி’ முதல்வர் ஒன்றிய அரசுக்கு ரகசியக் கடிதம்!

# சென்னை விமான நிலையம் அதானிக்கு தாரைவார்ப்பா?

## விலை போகும் தமிழ்நாடு! ஆளும் கூட்டணிக் கட்சியினர் கொந்தளிப்பு!

சென்னை, செப். 22 -

லாபத்தில் இயங்கும் சென்னை விமான நிலையத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைக்கு, ஆளும் தவெக அரசே சிவப்புக் கம்பளம் விரிக்கிறதா என்ற கடுமையான குற்றச்சாட்டு கள் எழுந்துள்ளன. இந்தியாவில் உள்ள முக்கிய விமான நிலையங்களை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஏற்கனவே மும்பை, அகமதாபாத், திருவனந்தபுரம் உள்ளிட்ட நாட்டின் மிக முக்கிய விமான நிலையங்கள் தனியார் பெருநிறுவனமான அதானி குழுமத்தின் கட்டுப்பாட்டுக்குச் சென்றுவிட்டன. தற்போது இந்தியாவில், ஒன்றிய அரசின் ‘இந்திய விமான நிலைய ஆணையத்தின்’ நேரடிக் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பெருநகர விமான நிலையங்கள் சென்னையும், கொல்கத்தாவும் மட்டுமே.

**அரசியல் விமர்சகர்கள் கண்டனம்!**

இவற்றையும் தனியார் வசம் ஒப்படைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டு வரும் சூழலில், சென்னை விமான நிலைய நிர்வாகத்தை மாற்றக் கோரி முதலமைச்சர் விஜய் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். நிர்வாக மாற்றம் என்ற பெயரில், விமான நிலையத்தை அதானி அல்லது ஜி.எம்.ஆர் போன்ற தனியார் பெருநிறுவனங்களிடம் முழுமையாக ஒப்படைக்கவே இந்த நடவடிக்கை பயன்படும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொதுவாக, பொதுத் துறை நிறுவனங்களை ஒன்றிய அரசு தனியார்மயமாக்கும் போது, மாநில அரசுகள் தங்களின் மாநில உரிமைகளை முன்னிறுத்தி யும், தொழிலாளர்களின் நலன் சார்ந்தும் அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதே இந்திய அரசியலின் எழுதப்படாத மரபாக இருந்து வருகிறது. ஆனால், இதற்கு முற்றிலும் முரணாக, தமிழக அரசே முதல்முறையாக முன்வந்து, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விமான நிலையத்தின் நிர்வாகத்தை மாற்றுமாறு கோரி கடிதம் எழுதியிருப்பது பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இது, பொதுத்துறை நிறுவனங்களை விற்கும் பாஜ அரசின் திட்டத்திற்கு, தமிழக அரசே வெளிப்படையாக துணைபோகும் செயல் என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விவகாரத்தில் மற்றொரு முக்கிய பின்னணியும் சுட்டிக்காட்டப்படுகிறது. முந்தைய அரசால் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அறிவிக்கப்பட்ட பல்லாயிரம் கோடி மதிப்பிலான புதிய பசுமைவெளி விமான நிலைய திட்டத்தை’ த.வெ.க. அரசு சமீபத்தில் கைவிட்டது.

**ரகசிய கடிதம் பலத்த சந்தேகம்!**

இது ஏற்கனவே தொழில் துறையினர் மற்றும் பொதுமக்களிடையே அதிருப்தியையும் விவாதத்தையும் ஏற்படுத்தியிருந்தது. புதிய விமான நிலையத் திட்டத்தை கைவிட்ட தவெக அரசு, தற்போது இருக்கக்கூடிய விமான நிலையத்தை யும் தனியாருக்கு வழங்கக் கோரி கடிதம் எழுதியிருப்பது பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகளை அதிகம் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பது கடிதத்தின் ‘ரகசியத் தன்மை’ தான்.

பொதுவாக, பிரத மருக்கு முதலமைச்சர் விஜய் எழுதும் கடிதங்கள், கோரிக்கைகள் குறித்த தகவல்கள் அடுத்த சில நிமிடங்களிலேயே அதிகாரப்பூர்வமாக செய்திக் குறிப்பாக அரசிடம் இருந்து ஊடகங்களுக்கு வெளியிடப்படும். ஆனால், சென்னை விமான நிலையம் தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதமே முதலமைச்சர் பிரதமர் மோடிக்கு இந்த கடிதத்தை எழுதியுள்ளார். பல மாதங்களாக இந்த விவகாரம் யாருக்கும் தெரியாமல், திட்டமிட்டு அரசுத் தரப்பில் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

**ஆளும் கூட்டணிக் கட்சிகள் பெரும் அதிருப்தி!**

தற்போது இந்த தகவல் கசிந்துள்ள நிலையில், ஏன் இந்த விவகாரத்தில் அரசு இவ்வளவு ரகசியம் காத்தது என்ற கேள்வி எழுந்துள்ளது. முதலமைச்சரின் இந்த ரகசிய நடவடிக்கையும், தனியார்மயமாக்கலுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கும் வகையிலான கடிதமும், ஆளும் கூட்டணிக் கட்சிகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தனியார்மயமாக்கலுக்கு எதிராகவும், மாநில உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் கூட்டணிக் கட்சிகள், அரசின் இந்த நிலைப்பாட்டால் அதிர்ச்சியில் உறைந்துள்ளன.

அரசின் இந்த முடிவுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஒன்றிய அரசின் தனியார்மயமாக்கல் கொள்கைக்கு தமிழக அரசு ஆதரவளிக்கிறதா, ரகசிய கடிதம் எழுதியதன் பின்னணி என்ன என்பது குறித்து முதலமைச்சர் விஜய் தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்பட்டால் மட்டுமே இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




# ‘எங்கள் முடிவை மாற்ற வேண்டிய நிலை வரும்!’

## த.வெ.க. அரசுக்கு – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பெ.சண்முகம் எச்சரிக்கை!

சென்னை, செப். 22 -

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்ற வளாகம் அமைக்கும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் நிருபர்களிடம் கூறியதாவது: -



புதிய தலைமைச் செயலகத்தை பட்டினப்பாக்கத்தில் அமைக்கும் முடிவை திரும்பப் பெற வேண்டும். சுனாமி பாதித்த பகுதியில், கடற்கரைக்கு அருகில் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் குடியிருப்புகளையும் பாதிக்கக்கூடிய வகையில் இந்த திட்டத்தை அமைப்பது ஏற்கத்தக்கதல்ல.

சென்னைக்குள்ளேயே புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டப் பேரவையை அமைப்பதற்கு பல்வேறு இடங்கள் உள்ளன. கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானம் சுமார் 160 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அங்கு எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்த முடியும். கோயம்பேடு பேருந்து நிலையம் கிளாம்பாக்கத்துக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், கோயம்பேடு பேருந்து நிலையத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மாற்று இடமாக பரிசீலிக்கலாம்.

பட்டினப்பாக்கத்தில் திட்டப் பணிகளை தொடங்கினால், அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தடுக்கும். இந்த அரசின் அணுகுமுறை திருப்திகரமாக இல்லை. எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு செவி கொடுப்பதில்லை. இதே நிலை தொடர்ந்து நீடித்தால் எங்கள் முடிவை மாற்ற வேண்டி வரும். சென்னை விமான நிலையத்தை தனியாருக்கு ஒப்படைப்பது தொடர்பாக முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையாக இருந்தால் கண்டனத்துக்குரியது. அந்த முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.





பகுத்தறிவு பகலவன் ”தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி, மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ”சமூக நீதி நாள் உறுதிமொழி ஒன்றிய கழக செயலாளர் டாக்டர்.வே. செழியன் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

### ‘தூய சக்தி’யின் ‘இரட்டைத் தன்மை நிலை எங்களுக்குப் பிடிக்கவில்லை’

# த.வெ.க. ஆட்சியில் திருப்தி இல்லாததால் தனித்துப் போட்டி!

## கே.சுப்பராயன் எம்.பி. பேட்டி!

*தாராபுரம், செப். 22 -*

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி. கே.சுப்பராயன் நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

ஒன்றிய அரசின் தந்திரமான, வஞ்சகமான நடவடிக்கைகளை எதிர்ப்பதில் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது. ஜனாதிபதிக்கு தமிழக அரசு அனுப்பி உள்ள 12 தீர்மானங்களில் தனியார் பல்கலைக்கழகத்திற்கு ஆதரவு அளிக்கும் தீர்மானமும் ஒன்று. இது தனியார் மயமாக்கலில் உள்ள இந்த அரசுக்கு ஆர்வம் உள்ளதை காட்டுகிறது. நாடு முழுவதும் உள்ள அரசு துறைகளில் இரட்டை நிலைப்பாட்டு தன்மையை கடைபிடிக்கிறார்கள்.

லஞ்சத்தை ஒழிப்பதாக கூறுகிறார்கள். ஆனால், அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆட்சி திருப்தியாக இல்லை. அதனால்தான் இந்தத் தேர்தலில் தனியாக போட்டியிடுகிறோம். கூட்டணி அமைக்க எங்களை அழைத்தார்கள். பல காரணங்களால்தான் நாங்கள் கூட்டணிக்கு செல்லவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

“த.வெ.க.வுக்கு ஆதரவு அளிக்கிறீர்களா? இல்லையா?” என நிருபர்கள் கேட்டபோது, “ கூட்டணி அமைக்க அவர்கள் அழைத்தார்கள். ஆனால், நாங்கள் வர மறுத்துவிட்டோம். இந்தத் தேர்தலில் ஆதரவை கொடுக்கும் முகாந்திரம் இல்லை” என்றார்.



**ஏன் இந்தக் கள்ளத்தனம்!**

‘தூய சக்தி என்று நடிக்கும் த.வெ.க. அமைச்சர்களிடம் ஏன் இந்தக் கள்ளத்தனம்?’ என சி.பி.ஐ. எம்.பி. சுப்பராயன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்; கம்யூனிஸ்ட்டுகளை நோக்கி வினாத் தொடுக்கும் த.வெ.க. அமைச்சர்களே, பா.ஜ.க. -அ.இ.அ.தி.மு.க. அணியில் வெற்றி பெற்ற MLA க்களை எதற்காக ராஜினமா செய்ய வைத்தீர்கள்? ராஜினாமா செய்தவுடனேயே எதற்காக த.வெ.க. உறுப்பினராகச் சேர்த்தீர்கள்?

அவர்களில் இருவரை த.வெ.க. வேட்பாளர்களாகவும் ஏன் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்? இதற்கான அம்மணமான அரசியல் உள்நோக்கம் என்ன? தூய சக்தி என்று ‘நடிக்கிற’ உங்களிடம் ஏன் இந்தக்’கள்ளத்தனம்?’ ஊழலும், முறைகேடும் உறுதிப்படுத்தப்படுமானால் யாராக இருந்தாலும் கம்யூனிஸ்டுகள் எதிர்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.





தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி மூலனூர் ஒன்றியம், வேளாண்பூண்டி ஊராட்சி, பாலகுமார் நகரில் உதயசூரியன் சின்னத்திற்குவாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.குமராசாமி, ப.மணிராசு, பகுதி கழக செயலாளர்கள் அக்னி டி.சந்திரசேகர் , க.லட்சுமணகுமார், வி.சி.நடராஜன், வி.செல்வராஜ், எஸ்.குமாரவடிவேல், குறிஞ்சி என்.தண்டபாணி, வில்லரசம்பட்டி எ.முருகேசன் உள்ளிட்ட கழகநிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.